2014 டிசம்பர் 5]
23—

ஜவுளிப் பூங்கா

***53532—திருமதி எல். ஜெயசுதா:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்களின் முதல்வர் எங்கள் அம்மா, உங்கள் ஒரு புன்னகையே பூமியைப் புரட்டிவிடும். புதிய வரலாறு படைத்திட்ட மக்களின் முதல்வர் அம்மா நேற்று மட்டுமல்ல, இன்று மட்டுமல்ல, நாளை மட்டுமல்ல என்றுமே மக்களின் மனங்களில் மகாராணியாய் வீற்றிருக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரே தலைவி புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து வணங்குகிறேன்.*

(அ) மற்றும் (ஆ) போளூர் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்கும் செயற்குறிப்பு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. இருப்பினும் அப்பகுதியிலுள்ள தொழில்முனைவோர்கள் ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வருவார்களேயானால், அரசு அங்கே ஜவுளிப் பூங்கா அமைக்க முன்வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10—50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.*

திருமதி எல். ஜெயசுதா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பூக்களுக்கும் புன்னகையைக் கற்றுத் தந்த போயஸ் தோட்டத்து பொன்மனத் தலைவியே, மூவேந்தர் தேசத்து உயிர் மூச்சே, சதிகளை மதியால் சாய்க்கின்ற தெளிவே, சத்தியத்தை நிலைநாட்டி சாதிக்கும் துணிவே, தமக்கென வாழாத தாயுள்ள*

தியாகமே, தடை தகர்த்து பகை வெல்லும் தன்மானச் சிங்கமே, காவேரியை மீட்டு வந்தாய், முல்லைப் பெரியாற்று உரிமையை முழுதாகக் காத்துத் தந்தாய், என்.எல்.சி. பங்குகளை ஏழைக்கே சொந்தம் செய்தாய், வீடுதோறும் விலையில்லா அரசி தந்தாய், கறவை மாடு, ஆடுகள் தந்தாய், கலங்கி நிற்கும் பெண்ணினத்தைக் கரைசேர்த்து, தாலிக்குத் தங்கம் தந்தாய்; Mixie, Grinder, Fan தந்தாய்; ஏழை வீட்டுப் பிள்ளைக்கும் இலவசமாய்க் கல்வி தந்தாய்; உடுப்பு தந்தாய்; தூரத்தைக் கடப்பதற்கு மிதிவண்டி என்னும் துடுப்பு தந்தாய்; உலகத்தை உள்ளங்கைக்குள் அடக்கிடவே மடிக்கணினி தந்தாய்; (மேசையைத் தட்டும் ஒலி) ஈரிலையில் வாழ்கின்ற இன்னொரு கலைமகளோ என இவ்வுலகுக்கே வியப்பும் தந்தாய்; தூரப் போ பகையே, எமக்குத் துச்சம் நீ என்று வெற்றி மேல் வெற்றிகளை விவேகத்தால் குவித்திட்டாய்; (மேசையைத் தட்டும் ஒலி) தெய்வத் திருமகளே! திருவரங்கத்துக் கீதையே! தாயே! தமிழே! எங்களின் குலதெய்வமே! அம்மா தங்களை வணங்குகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், போளூர் சட்டமன்றத் தொகுதி நெசவாளர்கள் நிறைந்த பகுதி. இப்பகுதி மக்களின் வாழ்வில் வசந்தத்தையும், வெளிச்ச ரேகைகளையும் உருவாக்கிட, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு போளூர் தொகுதியில் ஜவுளிப் பூங்கா அமைக்க வேண்டுமென மீண்டும் வலியுறுத்திக் கேட்டு அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தில், பட்டுத் தறிகள் 3,372–ம், கைத்தறிகள் 6,053–ம் ஆக மொத்தம் 9,425 தறிகள் உள்ளன. போளூர் தொகுதியில் ஒரு கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கமும், சுமார் 1,500 கைத்தறிகளும் உள்ளன. கடந்த 11–1–2012 அன்று திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களால் ஜவுளிப் பூங்கா அமைக்க ஏதாவது தொழில் முனைவோர்கள் வருவார்களா என்பதற்காகக் கூட்டம் நடத்தப்பட்டது. தொழில் முனைவோர்கள் எவரும் அந்தக் கூட்டத்தில் முன்வரவில்லை. ஜவுளிப் பூங்காவை அரசு நேரடியாக அமைப்பதில்லை. தனியார் முன்வருவார்களேயானால், அதிலே மத்திய அரசு நிதியுதவியோடு, மாநில அரசின் நிதியுதவி 9 சதவிகிதமும், ஒட்டுமொத்தமாக உள்ள நிதியிலே, ரூபாய் 65

2014 டிசம்பர் 5]

கோடிக்கு மேல் மிகாமல் உள்ள நிதியிலே, 9 சதவிகிதம் மானியமாகவும், மீண்டும் வங்கியிலே கடன் பெற்று அமைப்பதற்கு ஆவன செய்யக்கூடிய வகையிலே தமிழக அரசு உதவியாக இருக்கும். அப்படி யாரேனும் தொழில் முனைவோர்கள் அந்தப் பகுதியிலே முன்வருவார்களேயானால், நிச்சயமாக மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முன்வரும். உதாரணமாக, தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்டத்திலே, பட்டு நெசவாளர்களுக்கான ஒரு ஒருங்கிணைந்த ஜவுளிப் பூங்கா அமைப்பதற்காக அந்தத் தொழில் முனைவோர்கள் கூட்டாக வந்த நேரத்திலே, மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, 75 ஏக்கர் அந்தத் தொழில் முனைவோர்களுக்கு விலையில்லாமல் மானியமாக வழங்கி, அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதுபோல, ஒட்டுமொத்தத் தமிழகம் முழுவதுமாக 10 இடங்களில் இதுபோன்ற தொழில் முனைவோர்கள் வரக்கூடிய அந்த இடங்களிலே, அரசு உதவியுடன் அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அதைப்போல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுபோன்று ஏதாவது முயற்சி எடுத்து, தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மக்களின் முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு முதல் ஆளாக இருந்து நெசவாளர்களுடைய வாழ்வாதாரத்திற்காக நிச்சயமாக உதவியாக இருக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எல். ஜெயசுதா அவர்கள்.

திருமதி எல். ஜெயசுதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொழில் முனைவோர்கள் முன்வந்தால் அமைத்துக்கொடுக்கப்படும் என்று கூறிய தமிழக அரசிற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றி கூறி அமர்கிறேன். நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.